Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர - பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 134 · திங்கள் Monday · 16.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# தமிழகத்தில் ஏப்.23ம் தேதி சட்டமன்ற தேர்தல்

## மே.4ல் வாக்கு எண்ணிக்கை




சென்னை: தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23 ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் டெல்லியில் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறியதாவது: தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். வாக்குகள் மே 4-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

வேட்புமனு தாக்கல் மார்ச் 30-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ம் தேதி வரை நடைபெறும். மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்.7-ம் தேதி நடைபெறும். மனுவை திரும்ப பெற ஏப்.9-ம் தேதி கடைசி நாள். புதுச்சேரியில் ஏப்ரல் 9ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

தமிழகத்தில் 75,032 வாக்குச் சாவடிகள் உள்ளன. தமிழகத்தில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்தில் மே 10 ஆம் தேதியுடன் சட்டப்பேரவைக்கான பதவிகாலம் முடிவடைகிறது. வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு சதவீதம் அறிவிக்கப்படும். வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்கள் இடம்பெறும் என ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

தமிழ்நாடு, மேற்கு வங்கம் , அசாம், புதுச்சேரி, கேரளம் ஆகிய 5 மாநிலங் களுக்கான சட்டப்பே ரவைத் தேர்தல் தே தியை த லை மைத் தேர்தல் ஆணையர் ஞானே ஷ்குமார் தலைமையி லா ன தேர்தல் ஆணை யர்கள் இன்று புது டெல்லி யில் அறிவித்தனர். இதன்படி தமிழகத்தில் ஒரே கட்டமாக 2 3 4 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் தேதி குறித்த அ றிவிப்பு வெளியான நிலையில், தேர்தல் நடைபெற உள்ள தமிழக ம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

தேர்தலுக்கு தயாராகும் கூட்டணிகள்:

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணியில் சில கட்சிகளுக்கு ஏற்கெனவே தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மற்ற கட்சிகளுடன் தொகுதி ஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

அதிமுக - பாஜக கூட்டணியும் தேர்தலுக்கு தயாராகிவருகிறது. கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக, அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் பணிகளை தொடங்கி உள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து களத்தில் இறங்கியுள்ளார்.

# கொளத்தூரில் 551 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



சென்னை: பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.36.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 551 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25 கோடியே 51 லட்சத்து 20 ஆயிரம் செலவிலான முடிவுற்ற பணிகளையும்; சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 33 லட்சம் செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 6 மேம்படுத்தப்பட்ட பள்ளிகளையும்; வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பெரம்பூரில் ரூ.8 கோடியே 76 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 551 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள பேறறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கார்த்திகேயன் சாலையில் ரூ.68 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புறக்காவல் நிலைய கட்டடம், ஜி.கே.எம். காலனி 29-வது தெருவில் 27 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டடம்;

வ.உ.சி. தெருவில் ரூ.50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடம், புளியந்தோப்பு, போகிபாளையத்தில் ரூ.1 கோடியே 90 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை உருது துவக்கப் பள்ளி கட்டடம், அயனாவரம், மதுரை தெருவில் ரூ.37 லட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன நூலகக் கட்டடம்;

மதுரை சாமி மடம் சாலையில் ரூ.1.20 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடல், பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.36 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட உசைன் பூங்கா, பல்லவன் சாலையில் ரூ.33 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன நூலகக் கட்டடம், பெரம்பூர் நெடுஞ்சாலை தெருவில் முரசொலி மாறன் பூங்காவில் ரூ.5.45 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் பூங்கா;

நகர்ப்புற வீடற்றோருக்கு தேவராஜ் தெருவில் ரூ.72 லட்சத்து 40 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள இரவு காப்பகம் மற்றும் சிவா ராவ் சாலையில் ரூ.72 லட்சத்து 40 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள இரவு காப்பகம், குட்டி தம்புரான் தெருவில் ரூ.72.40 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள இரவு காப்பகம், புளியந்தோப்பு நரசிம்ம நகரில் ரூ.2.20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

மேலும், பேப்பர் மில்ஸ் சாலையிலுள்ள எவர்வின் பள்ளி வளாகத்தில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதலமைச்சர் 4,444 கழக நிர்வாகிகளுக்கு தோல் பை, நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா ஆகியவற்றை வழங்கினார். பெரம்பூர் டான் பாஸ்கோ பள்ளிவளாகத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் 8-ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு பயிற்சி முடித்த 5,000 மாணவர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்களையும் வழங்கினார்.

# சட்டமன்றத் தேர்தல் 2026: 4 பேர் கொண்ட தொகுதிப் பங்கீட்டுக் குழுவை அமைத்தது அதிமுக



சென்னை: தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல், புதுச்சேரி மற்றும் கேரளம் மாநில சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான 4 பேர் கொண்ட தொகுதிப் பங்கீட்டுக் குழுவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அஇஅதிமுக) அறிவித்துள்ளது. கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சி. சீனிவாசன், எஸ்.பி. வேலுமணி மற்றும் பா. வளர்மதி ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அதிமுக தொகுதிப் பங்கீடு குழு

அதிமுக, பாஜக, அமமுக, பாமக, இந்திய ஜனநாயக கட்சி உள்ளிட்ட கட்சிகள் தேசிய ஜனநாயக கூட்டணியில் (என்.டி.,ஏ) இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில், விரைவில் நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலில், கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவாரத்தை நடத்துவதற்கான தொகுதிப் பங்கீட்டுக் குழுவை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். இதில் 4 முக்கிய கட்சி நிர்வாகிகள் இடம்பெற்றுள்ளனர். அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி, திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன், கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.பி.வேலுமணி மற்றும் கழகசெய்தித்தொடர்பாளர் பா. வளர்மதி ஆகியவர்கள் கொண்ட குழு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரளம் சட்டமன்றத் தேர்தல் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை மேற்கொள்ளவுள்ளது.i

தேர்தல் பிரச்சாரக் குழு அமைப்பு

இதுமட்டுமின்றி, தேர்தல் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ள 10 பேர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மு. தம்பிதுரை, செல்லூர் கே.ராஜி, கே.பி. அன்பழகன், பா. தனபால் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

1. மு. தம்பிதுரை எம்.பி - கொள்கை பரப்புச் செயலாளர்

2. என். தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ - அமைப்புச் செயலாளர், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

3. செல்லூர் கே.ராஜி எம்.எல்.ஏ - அமைப்புச் செயலாளர், மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் 4. பா.தனபால் எம்.எல்.ஏ - அமைப்புச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர்

5. கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ - அமைப்புச் செயலாளர், தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர்

6. ஆர். காமராஜ் எம்.எல்.ஏ - அமைப்புச் செயலாளர், திருவாரூர் மாவட்டக் கழக செயலாளர் 7. எஸ். கோகுல இந்திரா - அமைப்புச் செயலாளர், கழக செய்தித் தொடர்பாளர்

8. பா.பென்ஜமின் - அமைப்புச் செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் 9. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ - அமைப்புச் செயலாளர், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

10. என்.ஆர்.சிவபதி - எம்.ஜி.ஆர் இளைஞர் அணிச் செயலாளர்

தேர்தல் சம்பந்தமான விளம்பரப் பணிகளை மேற்கொள்வதற்கான 8 பேர் கொண்ட தேர்தல் விளம்பரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சி. விஜயபாஸ்கர், கடம்பூர், சி. ராஜு, பி. வேணு கோபால், கெ.டி. ராஜேந்திர பாலாஜி, அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தேர்தல் சம்பந்தமான சட்டப் பிரச்சனைகளுக்கான தீர்வு காணும் வகையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் சி.வி.சண்முகம், வி.எஸ். சேதுராமன் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி 1வது வார்டு உடைகுளம் பகுதியில் 58 லட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய கூடத்தினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி, திமுக மாவட்ட துணை செயலாளர் சேங்கைமாறன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, துணைத் தலைவர் பாலசுந்தர், நகர் கழகச் செயலாளர் பொன்னுச்சாமி, அரசு அலுவலர்கள், நகர் மன்ற உறுப்பினர் தேன்மொழி விஜயகுமார் மற்றும் வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் வழங்கினார்



செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் அருகே தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நகர கழக செயலாளர் ச. நரேந்திரன் தலைமையில் நடைப்பெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் தனது சொந்த செலவில் 66 மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்காக 6 இலட்ச மதிப்பில் 75 ஆடுகளை மாற்றுத்திறனாளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார். இந்நிகழ்வில் செங்கல்பட்டு நகர்மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன், நகர்மன்ற உறுப்பினர்கள் ராஜீ, சந்தோஷ் கண்ணன், ரேகா மணிகண்டன், உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, புதிய பேருந்து நிலையம் அருகே, நகராட்சி பொது நிதியில் 7 இலட்ச மதிப்பீட்டில் புணரமைக்கப்பட்ட பேருந்து நிலையம், திறப்பு நகர்மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன் தலைமையில் நடைப்பெற்றது. இதனை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் திறந்து வைத்தார். இதில் கழக செயலாளர் நரேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி நேதாஜி தினசரி மார்க்கெட் கனி வணிகர்கள் சங்கத்தின் சார்பாக புனித ரமலான் பண்டிகையை முன்னிட்டு எளிய முகமதிய மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்கும் விழா வருடம் தோறும் வழங்கி வரும் நிகழ்ச்சி இந்த ஆண்டு சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் டி.என். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை சங்கச் செயலாளர் எம். சாதிக் பாட்சா, சங்கப் பொருளாளர் எஸ்.கார்த்திக், துணைத் தலைவர் எஸ்.கே.எஸ். சுரேஷ் , துணைச் செயலாளர் ஏ.சரவணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் ஈரோடு மாவட்டத் தலைவர் இரா.க.சண்முகவேல், மாவட்ட பொருளாளர் உதயம் பொ.செல்வம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.லாரன்ஸ் ரமேஷ், மாவட்ட செய்தி தொடர்பாளர் ஏ.எம்.சாதிக் பாட்சா ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்நிகழ்வில் சுமார் ஒரு இலட்சம் மதிப்புள்ள உணவு பொருட்கள் வழங்கப்பட்டது.

# உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

## சிலிண்டர்களுக்கு மாலை அணிவித்து எதிர்ப்பை தெரிவித்தனர்



கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க உரிய நடவடிக்கை இருக்காத மத்திய பிஜேபி அரசை கண்டித்து உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு திமுக கூட்டணி கட்சியினர் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மகளிர் அணியினர் காளி சிலிண்டர்களுக்கு மாலை அணிவித்து ஒப்பாரி வைத்து கும்மி அடித்து தங்களது எதிர்ப்பை தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டு வரும் போர் பதற்றம் காரணமாக இந்தியாவில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நிலவி வருகிறது இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத மத்திய பிஜேபி அரசை கண்டித்து திமுக கூட்டணி கட்சியினர் இன்று தமிழகம் தழுவிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் இதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு சட்டமன்ற உறுப்பினர் மணி கண்ணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர் அப்பொழுது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திமுக கூட்டணி கட்சியைச் சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள் ஆர்ப்பாட்ட பந்தலில் வைக்கப்பட்டிருந்த தாலி கேஸ் சிலிண்டர்களுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் வகையில் ஒப்பாரி வைத்து கும்மி அடித்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர் இதனால் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.



கன்னியாகுமரி மாவட்டம் முளகுமூடு பகுதியில் திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றிய காதலி வீட்டின் முன்பு காதலன் விஷம் குடித்து தற்கொலை முயற்சி. மூன்று ஆண்டுகளாக தனது மகன் வேலை செய்த பணத்தை வாங்கிவிட்டு ஏமாற்றிய பெண்ணின் குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுக்க கோரி பாதிக்கப்பட்ட வாலிபரின் குடும்பத்தினர் நாகர்கோவிலில் எஸ்பி அலுவலகத்தில் புகார் அளித்தனர்.

# நாகர்கோயில், நெல்லை, திருச்சி, விழுப்புரம் வழித்தடத்தில் 3, 4வது ரயில் பாதைகள்




தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் ரயில் பாதைகள் அமைக்க இறுதிகட்ட ஆய்வு நடத்த ரயில்வே வாரியம் அனுமதி

சென்னை – அரக்கோணம், அரக்கோணம் – ரேணிகுண்டா, சென்னை – கூடூர் ஆகிய வழித்தடங்களில் 5, 6வது பாதைகள், விழுப்புரம் – திருச்சி – நெல்லை – நாகர்கோயில் வழித்தடத்தில் 3, 4வது பாதைகள், திருச்சி – காரைக்குடி – மானாமதுரை – மதுரை வழித்தடத்தில் 2வது பாதை, போத்தனூர் – பொள்ளாச்சி – பாலக்காடு வழித்தடத்தில் 2வது பாதை அமைக்க இறுதிகட்ட ஆய்வு நடத்தப்பட உள்ளது



நாகர்கோவிலுக்கு வந்த எக்ஸ்பிரஸ் ரயிலில் கடத்திவரப்பட்ட 8 கிலோ கஞ்சா பார்சல்கள் பறிமுதல்ரயில்வே போலீசார் அதனை மீட்டு மதுவிலக்கு போலீசாரிடம் ஒப்படைப்புஅதனை தொடர்ந்து வழக்கு பதிவு செய்து ரயிலில் கஞ்சா பார்சல் கடத்தி வந்த மர்மநபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.




தேவகோட்டை தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பள்ளியில் பாராட்டு விழா நடைபெற்றது. ஆசிரியை முத்துமீனாள் வரவேற்றார்.விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார் . தேவகோட்டை முத்தமிழ் வேத திருச்சபை சார்பில் நடைபெற்ற பாடல்கள் ஒப்புவிக்கும் போட்டியில் முதலிடம் பெற்ற நந்தனா,சரண்குமார் , அஜிதா , ரித்திகா,ஜாய் லின்சிகா, உட்பட 41 மாணவர்களுக்கும், பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்கும் போட்டிகளை நடத்திய முத்தமிழ் வேத திருசபையின் துணை செயலர்கள் ஆதி ரெத்தினதிம் மற்றும் மகாலிங்க மூர்த்தி ஆகியோர் பரிசுகளை வழங்கி பாராட்டினார் .. நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.ஏராளமான பெற்றோர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

# நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 2ஆம் ஆண்டு விளையாட்டு விழா பீட்ஸ் ரீலோடட் 26




நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை உடற்கல்வி துறையின் சார்பில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் அடங்கிய 2 ஆம் ஆண்டு விளையாட்டு விழா "பீட்ஸ் ரிலோடட் 26" இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற விழாவினை அறக்கட்டளையின் உறுப்பினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

முதலாவதாக நந்தா மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் மருத்துவ மேற்பார்வையாளர் பேராசிரியர் மருத்துவர் வி. சுந்திரவேல் அவர்கள் விளையாட்டு விழாவில் பங்கேற்ற அனைவரையும் வரவேற்றார்.

பின்னர் கல்லூரியின் விளையாட்டு பிரிவு செயலாளரும், மூன்றாம் ஆண்டு மாணவியுமான செல்வி இனியால், கடந்த கல்வியாண்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் சாதனைகள் அடங்கிய ஆண்டறிக்கையினை வாசித்தார்.

முன்னதாக ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி மற்றும் மருத்துவக் கல்லூரியின் புலமுதல்வர் பேராசிரியர் மருத்துவர் ஏ.சந்திரபோஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினார்கள்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மாணவ-மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் ஏற்றுக் கொண்டு விளையாட்டு போட்டிகளை கொடியேற்றத்துடன் துவக்கி வைத்தார்.

பின்னர் மாணவ-மாணவிகள் லாப்ராஸ், அம்பாரோஸ், சார்மெண்டர் மற்றும் டைரனிடர் அணிகளாக ஓட்டப்பந்தயங்கள், நீளம் மற்றும் உயரம் தாண்டுதல் போன்ற பல்வேறு உள் மற்றும் வெளி அரங்கு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியர்களுக்கு 36 இனடர் ஹவுஸ் ரோலிங் டிராபிகள் வழங்கப்பட்டன. மேலும் அதிக புள்ளிகளின் அடிப்படையில் முதலாம் இடத்தினைத் தக்க வைத்துக் கொண்ட அணியான "அம்பாரோஸ் அணி" ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் பெற்று வெற்றி வாகை சூடியது.

விளையாட்டு விழாவின் போது நடைபெற்ற தடகள போட்டிகளின் மூலம் தனி நபருக்கான சாம்பியன் பட்டத்தினை ஆண்கள் பிரிவில் மூன்றாம் ஆண்டு மாணவன் செல்வன் ஜி.ஏ. அஸ்வின்ராஜ் மற்றும் பெண்கள் பரிவில் மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி டி. ஹருன்யா ஆகியோர் தக்க வைத்துக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் வழங்கி பாராட்டினார்.

விழாவின் முடிவில், நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் துணை முதல்வர் பேராசிரியர் மருத்துவர் ஆர்.சுப்புராம் அவர்கள் ஒற்றுமை, ஒழுக்கம், ஆரோக்கியம், மற்றும் வெற்றியினை வழங்கும் ஒரு சிறந்த தளமாக அமைந்தது என்றும், மேலாண்மை மற்றும் ஏற்பாட்டுக் குழுகள், உதவி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நன்றி கூறினார்.



கன்னியாகுமரியில் ஒன்றிய அரசின் கொள்கைகளை கண்டித்து திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கன்னியாகுமரி தபால் நிலையம்முன்புநடைபெற்றஇந்தஆர்ப்பாட்டத்திற்குகன்னியாகுமரிதிமுகசெயலாளரும் நகராட்சி தலைவருமான குமரி ஸ்டீபன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் திமுக மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் பி.டி. செல்வக்குமார், நாஞ்சில் மைக்கேல், முன்னாள் கவுன்சிலர் தாமஸ் நிசார், கவுன்சிலர்கள் இக்பால், பூகோல ராஜா, சகாய செர்ஜினால்,ஜெனிட்டாமெல்பின்உள்ளிட்டோர்பங்கேற்றனர்.மேலும்கட்சிநிர்வாகிகள் கேய்சர், தேமுதிக, மாநில நிர்வாகி சிவகுமார் நாகப்பன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜவஹர், திமுக நிர்வாகிகள் அன்பழகன், மணிராஜா, எஸ்டிபிஐ கட்சியின் சாஹுல் ஹமீது, உள்ளிட்ட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

## தாரமங்கலத்தில் திமுக சார்பில் சமையல் எரிவாய்வு தட்டுப்பாட்டை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



சேலம்மேற்கு மாவட்டம்தாரமங்கலம்பேருந்துநிலையம்அருகில்சமையல்எரிவாய்வு தட்டுப்பாட்டை கண்டித்தும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் பாஜக அரசை கண்டித்து தாரமங்கலம் நகர திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தாரமங்கலம் நகர செயலாளரும் நகர மன்ற தலைவருமான TMS.குப்பு (எ) குணசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தாரமங்கலம் நகர மன்ற துணைத் தலைவர் தனம் தங்கராஜ்,திமுக கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள், திமுக வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பாஜக அரசை கண்டித்து கோசங்களை எழுப்பினர்.

### மதுராந்தகத்தில் ஒன்றிய அரசை கண்டித்து

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தேரடி தெருவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்ஒன்றியபா.ஜ.க.- NDA அரசின் தவறான வெளியுறவு கொள்கையாலும் போதிய முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டை கண்டித்தும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்துவரும் - NDA அரசயையும் அதன் அடிமை கூட்டணியும் கண்டித்து மாவட்டம் முழுவதும் நடைபெறும் ஒரு பகுதியாக அச்சிறுப்பாக்கத்தில் மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் மதுராந்தகம் நகரக் கழக செயலாளர் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் திமுக ஒன்றிய செயலாளர்கள் சத்திய சாய், பொன் சிவகுமார்,

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் அன்புச்செல்வன், பேரறிவாளன், கிட்டு பிரபாகரன், முகிலன், கதிர்வாணன், சமத்துவன், உள்ளிட்ட

உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் என 500க்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர்

## பாலியல் தொல்லை, வீடு நிலத்தை அபகரிக்க முயற்சி, கணவரை இழந்த பெண், ஈரோடு எஸ்பியிடம் கண்ணீர் மல்க புகார்



பவானி வட்டம் ஒலகடம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் மஞ்சுளா க/ பெ கணபதி (வயது 46) கணவரை இழந்து தனது மகனுடன் வசித்து வருகிறார்... உறவுக்காரரான ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற ரவிச்சந்திரன் என்பவர் தனது ஆசைக்கு இணங்க வேண்டி தொடர்ந்து பாலியல் துன்புறுத்தல் செய்து வருகிறார்.....

இது சம்பந்தமாக பவானி மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பெயரளவில் விசாரித்து அனுப்பி விட்டனர் ஆனால் தொடர்ந்து தனது ஆசைக்கு இணங்க வேண்டுமென வற்புறுத்தி வருகிறார்....

இல்லையென்றால் விபச்சாரியாகசித்தரித்து தனது நண்பர் சுரேஷ் மூலம் வெட்ட வெளிச்சம் பத்திரிக்கையில் செய்தி வெளியிட்டு உன் குடும்ப மானத்தை வாங்கி விடுவேன் என மிரட்டி வருகிறார்.

இது குறித்துவிசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தனது மகன் ஜோதிபாசு உடன் ஈரோடு மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் மனு அளித்துள்ளார்.. செய்தியாளர்களிடம் பேட்டி அளித்த வீடியோ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.



### அச்சிறுப்பாக்கத்தில்

## மத்திய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

### மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி அலுவலகம் எதிரே மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்ஒன்றியபா.ஜ.க.- NDA அரசின் தவறான வெளியுறவு கொள்கையாலும் போதிய முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டை கண்டித்தும் தமிழ்நாட்டைதொடர்ந்து வஞ்சித்துவரும் - NDA அரசயையும் அதன் அடிமை கூட்டணியும் கண்டித்து மாவட்டம் முழுவதும் நடைபெறும் ஒருபகுதியாகஅச்சிறுப்பாக்கத்தில் மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே, கண்ணன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் ஜி,தம்பு , டிவி, கோகுலகண்ணன் ,வரவேற்புரையில் பேரூர் கழக செயலாளர் எழிலரசன், பேரூர் மன்ற தலைவர் நந்தினி கரிகாலன்,முன்னிலையில் நடைபெற்ற இந்த மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர்கள் வசந்தா „ மாலதி, ஆதி திராவிட நலக்குழு மாவட்டத் துணை அமைப்பாளர்சிவகுமார். பொதுக்குழு உறுப்பினர் உசேன். மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஷாஜகான் எடிசன் பன்னீர்செல்வம் தயாநிதி காசி, சிவகுமார் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் என 500க்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர்



தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை என்றகருத்தைவைத்துதமிழகமுழுவதும்மதச்சார்பற்றஜனநாயகம்முற்போக்குகூட்டணி கட்சிகளின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது அதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி பகுதியில் அவனியாபுரம் கிழக்கு பகுதி தகுதி கழக செயலாளர் செந்தாமரைக்கண்ணன் திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தனபாலன் ஆகியோர் தலைமையில் கண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றது.இதில்மதசார்பற்றஜனநாயகமுற்போக்குகூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமான ஒரு கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டனக் கவசங்கள் எழுப்பிய படி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### சங்கரன்கோவில் அருகே

## நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிமுக கூட்டம்



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சாலைப்புதூரில் நாம்தமிழர்கட்சிசார்பில் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளைச் செயலாளர் ராஜன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சந்திரசேகரன், இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன், மாநில ஒருங்கிணைப்பாளர் சாந்தகுமார், மண்டல செயலாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கவிதா ஏற்புரையாற்றினார். தேர்தலும் தேசியமும் என்ற தலைப்பில் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் அ.கோ. தங்கவேல், தமிழர் வாக்கும், வாழ்க்கையும் என்ற தலைப்பில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் பசும்பொன் ஆகியோர் விவசாயசின்னத்திற்கு வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் சங்கரன்கோவில் நகர செயலாளர் சுரேஷ், மாநில உழவர்பாசறை ஒருங்கிணைப்பாளர் விவசாயி பாலா, வணிகர் பாசறை செயலாளர் ராஜ், தகவல் தொழில்நுட்ப பாசறை ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன், வடக்கு அச்சம்பட்டி எட்வின் ராஜ், நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் சுப்புலட்சுமி, உதயகுமார், சுரேஷ், சஞ்சய், ராஜேஷ், ராமச்சந்திரன், ஜேக்கப், நோவா, மதியழகன், சோலையப்பன் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வடநாட்டில் கொள்ளையர்களை பிடிக்கச் சென்றபோது கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட மூவிருந்தாளி இன்ஸ்பெக்டர் பெரிய பாண்டியன் நினைவிடத்தில் நாம் தமிழர் கட்சியினர் வீரவணக்கம் செலுத்தினர்.

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 42 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைபட்டாக்களை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், அம்மன் காட்டேஜ் பகுதியில் (14.03.2026) அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் 42 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது,


தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அன்புக்கரங்கள் திட்டம், கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, வங்கிகடன் தள்ளுபடி, விவசாய கடன் தள்ளுபடி, வரும்முன் காப்போம், நம்மைக் காக்கும் 48, மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் என பல்வேறு திட்டங்கள் எனஅனைவரும்பயன்பெறும்வகையில்திட்டங்களை செயல்படுத்திவருகிறார்கள்.இத்தகையதிட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அந்த வகையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளான சென்னிமலை, முகாசிபிடாரியூர், முருங்கத்தொழுவு, ஆகிய பகுதிகளை சேர்ந்த 42 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைபட்டாக்களை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, பெருந்துறை வட்டாட்சியர் சரவணன், துணை வட்டாட்சியர் ரேவதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### ஈரோடு மாவட்டத்தில்

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தற்காலிகமாக நிறுத்திவைப்பு



ஈரோடு மாவட்டம், 98 ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதி, 99 ஈரோடு (மேற்கு) சட்டமன்ற தொகுதி, 100 மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, 103 பெருந்துறை சட்டமன்ற தொகுதி, 104 பவானி சட்டமன்ற தொகுதி, 105 அந்தியூர் சட்டமன்ற தொகுதி, 106 கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி மற்றும் 107 பவானிசாகர் சட்டமன்றதொகுதி (எஸ்.சி) ஆகிய எட்டு தொகுதிகளுக்கு 23.04.2026 அன்று சட்டமன்றதேர்தல் நடைபெறும் என இந்தியத் தேர்தல் ஆணையம் 15.03.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்படுத்தப்பட்டதால், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிரதி வாரம் திங்கட்கிழமை நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் இதர குறைதீர்க்கும் கூட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. மீண்டும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தகவல் தெரிவித்துள்ளார்.

### உளுந்தூர்பேட்டை அருகே பரபரப்பு

## ஸ்கூட்டருக்குள் புகுந்த 5 அடி நீளப் பாம்பு கொம்பேறி மூக்கன்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்தகீரனூர்பகுதியில்வசிக்கும்அரசன்என்பவரது ஸ்கூட்டர் இருசக்கர வாகனத்திற்குள், இன்று எதிர்பாராத விதமாக சுமார் 5 அடி நீளமுள்ள 'கொம்பேறி மூக்கன்' பாம்பு ஒன்று புகுந்தது.

வாகனத்தை எடுக்கச் சென்றபோது பாம்பைக் கண்டு அதிர்ச்சியடைந்த அரசன், உடனடியாக உளுந்தூர்பேட்டை தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், ஸ்கூட்டரின் பாகங்களுக்குள் மறைந்திருந்த பாம்பை சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு லாவகமாகப் பிடித்தனர்.

பின்னர், பிடிபட்ட அந்தப் பாம்பை வனப்பகுதிக்குக் கொண்டு சென்று காப்புக்காட்டில் பத்திரமாக விடுவித்தனர். தீயணைப்பு வீரர்களின் இந்த துரித நடவடிக்கையை அப்பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டினர்.



கன்னியாகுமரி:மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் தென்தாமரைகுளம் தபால் நிலையம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய பாஜக NDA அரசின் தவறான வெளி உறவு கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கதாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் கூட்டணி கட்சிகளையும் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் உயிரிழந்த பிளஸ்2 மாணவி உயிரிழந்ததற்கு காரணமாக இருந்த குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் விதமாகவும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காகவும் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்திற்கு சென்று ஊர் மக்களிடமும் மாணவி தாய் தந்தைக்கு, சகோதரிக்கு நேரில் சந்தித்து ஆறுதல் கூறி ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த சந்திப்பில் வழக்கறிஞர் ஹென்றி திபேன், ஸ்டெர்லைட் போராளி பேராசிரியர் பாத்திமா பாபு, வழக்கறிஞர்கள் மாடசாமி, கணேசன், அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச்செயலாளர் தோழர் குரு நாகலிங்கம், ஏஐசிசிடியு தொழிற்சங்கத்தின் தேசிய செயற்குழு உறுப்பினரும் மாவட்ட தலைவர் தோழர் மின்னல் அம்ஜத் மற்றும் ஊர் மக்களும் கலந்து கொண்டோம்.

# அகில இந்திய ஜனநாயக சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்கம் சார்பில் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு கூட்டம்



தூத்துக்குடியில் அகில இந்திய ஜனநாயக சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்கம் சார்பில் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு தூத்துக்குடி பீச் ரோடு தனியார் அரங்கில் அகில இந்திய ஜனநாயக சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்க தலைவர் அருட்திரு ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டார்.

கருத்தரங்கில் மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேன், அகில உலக மனித உரிமைகள் பாதுகாப்பு கவுன்சில் இயக்குநர் ஜேம்ஸ் சுகுமார், மனித உரிமை பயிற்றுநர் கணேசன் ஆகியோர் சட்ட சிறப்புரை ஆற்றினார்கள்.

நிகழ்ச்சிக்கு ஆயர் இல்லம் வழக்கறிஞர் அருட்தந்தை பெஞ்சமின், பேராசிரியர் பாத்திமா பாபு, வழக்கறிஞர் மாடசாமி, போதகர்கள் அலெக்ஸ் செல்வராஜ், கோவில்பட்டி பாக்கியநாதன், அண்டோ மஸ்கர்னாஸ் முன்னிலை வகித்தனர். போதகர்கள் மோசஸ், சாமி ஜான், சுரேஷ் வேதமுத்து வரவேற்பு அளித்தனர்.

கருத்தரங்கில் மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேன் பேசுகையில்;

அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் எதிர்த்து நின்று உரிமை குரல் எழுப்புவதற்கான நேரமும் அவசியமும் இப்பொழுது இருக்கிறது.

பிஞ்சு உள்ளங்களில் சாதியம் எனும் நஞ்சை விதைத்து அதன் மூலம் பொது அமைதியை சீர்குலைக்கும் பாசிச செயல்களை முளையிலேயே கிள்ளி எறிய பள்ளிகளில் சமத்துவத்தை பேணி பாதுகாக்கும் நேசிக்கும் இந்திய அரசியல் சாசனத்தை பாதுகாக்கும் ஒரு முன்மாதிரியான சமத்துவ சகோதரத்துவ பாட திட்டத்தை கொண்டு வந்து மாணவ பருவத்திலேயே செயல்படுத்த வேண்டும். இது சாதி ரீதியான மோதல்களை வேரோடும் வேரடி மண்ணோடும் அகற்ற உதவும் என்று பேசினார்.

சிறுபான்மையினர் உரிமைகள், அனைத்து தரப்பினருக்கும் சட்ட பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து கருத்தரங்கில் பேசப்பட்டது. நிறைவாக போதகர் ராஜா நன்றி கூறினார். தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்டச்செயலாளர் கிதர் பிஸ்மி, அகில இந்திய ஜனநாயக சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# சமையல் எரிவாயு சிலிண்டர் உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள்' கண்டன ஆர்ப்பாட்டம்.







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காந்தி சிலை முன்பாக 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள்' சார்பாக "சமையல் எரிவாயு சிலிண்டர் உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய அளும் பாஜக அரசை வன்மையாக கண்டித்து", சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சஞ்சய் காந்தி, நகர் கழக செயலாளர் பொன்னுச்சாமி, நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, நகர் தலைவர் புருஷோத்தமன் ஆகியோர் தலைமையில், 'மோடிஜி வேர் இஸ் எல்பிஜி', 'துப்பில்லை துப்பில்லைசமையல்சிலிண்டர் பிரச்சனையை தீர்க்கத் துப்பில்லை', 'கண்டுக்கிறோம் கண்டிக்கிறோம் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் டப்பாஇஞ்சினை கண்டிக்கிறோம்', 'ஆர்ப்பாட்டம் ஆர்ப்பாட்டம் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் என்டிஏ அடிமை கூட்டணியை கண்டித்து ஆர்ப்பாட்டம்','சிலிண்டர்எங்கே வாய்சவடால் மோடியே சிலிண்டர்எங்கே',போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு, சிலிண்டருக்கு மாலை அணிவித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த ஒன்றிய செயலாளர்கள் ராஜாமணி, அண்ணாதுரை, முத்துசாமி, தர்மாராமு, அசோக், விடுதலை மாணிக்கம், பாண்டிவேல், காசி ராமலிங்கம், முருகேசன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.மேலும் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை கண்டித்து அனைத்து கட்சி பிரதிநிதிகளும் கண்டன உரையாற்றினர்.

இந்நிகழ்வில் சார்பாக முற்போக்கு கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், திமுக, விசிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, மநீம, தேமுதிக, திராவிடர் கழகம் உள்ளிட்ட கட்சிகளின் அனைத்து சார்பு அணிகளை சேர்ந்த மாநில, மண்டல, மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைகளை சேர்ந்த முன்னாள் மற்றும் இந்நாள் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





மத்திய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஈரோட்டில் சிம்னி ஹோட்டல் அருகில் நடைபெற்றது .இந்நிகழ்வில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சி துறை ,மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மேல் சபை உறுப்பினரும் திமுக கழக துணை பொது செயலாலருமான அந்தியூர் ப. செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், Ex.MP கந்தசாமி, மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார், செல்ல பொன்னி, மற்றும் மண்டல குழு தலைவர்கள், பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி சந்ரு (எ) D. சந்திரசேகர், தோழமை கூட்டமைக் கட்சி தலைவர்கள், நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர் உடன் இருந்தனர்.

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நிபந்தனைப்பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி 184 பயனாளிகளுக்கு பட்டாக்களை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்



ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையம் பகுதியில் (14.03.2026) அன்று வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி வருவாய் மற்றும்பேரிடர்மேலாண்மைத்துறையின் சார்பில் நிபந்தனைப்பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி 184 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

உயர்கல்வி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம், பள்ளி குழந்தைகளுக்கு சோர்வின்றி கல்வி பயில முதலமைச்சரின் காலை உணவு த் தி ட் ட ம் , மா ற் று த் தி ற னா ளி க ளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எனவே பொதுமக்கள் இத்தகைய அரசு நலத்திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகிணங்க அந்தியூர் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் நிபந்தனை பட்டாக்களை நிபந்தனையற்ற பட்டாக்களாக மாற்றி வழங்க ஆணையிட்டு இருந்தார். அதனை தொடர்ந்து வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் அந்தியூர் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வ கை யி ல் நிபந்தனைப்பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி 184 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

முன்னதாக, வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் அந்தியூர், தேர்வீதி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.9.50 இலட்சம் கட்டி முடிக்கப்பட்ட வள்ளல் வேலாயுதம் பிள்ளை கலையரங்கத்தினையும், அந்தியூர் பேரூராட்சி, பேருந்து நிலையத்தில் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் ரூ.202 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூரையுடன் மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம் என மொத்தம் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித்திட்டப்பணிகளை திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாச்சலம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார். மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், அந்தியூர் வட்டாட்சியர் இளஞ்செழியன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு திண்டல், கீதாஞ்சலி ஆல் இந்தியா சீனியர் செகன்டரி பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.03.2026) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி 2 (Group II/IIA) தேர்வு நடைபெற்றதை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டத்திற்கு நகர்ப்புற உள்ளாட்சித்தேர்தலுக்கு பயன்படுத்தப்படவுள்ள பெங்களூர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற 4400 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஈரோடு மாநகராட்சி தமயந்திபாபுசேட் திருமண மண்டப, பாதுகாப்பறையில் பாதுகாப்பாக வைத்து, சீலிட மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி முன்னிலையில் இறக்கி வைக்கப்பட்டபோது எடுத்த புகைப்படம். இந்நிகழ்வின் போது ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) த.ரமேஷ்கிருஷ்ணன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தார்கள்.

# தமிழ்நாட்டுக்கு நிதியும் தரவில்லை, சிலிண்டரும் கிடைக்கவில்லை பாஜக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி திருப்புவனம் சந்தை திடலில் சமையல் எரிவாயு விலை ஏற்றம் மற்றும் தட்டுப்பாட்டை உருவாக்கி பொதுமக்களை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிய ஆளும் பாஜக மற்றும் என்டிஏ கூட்டணியை வன்மையாக கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பாக', முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்றஉறுப்பினர்தமிழரசி ரவிக்குமார் தலைமையிலும், சிவகங்கை மாவட்ட திமுக துணைச் செயலாளர் சேங்கைமாறன் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் ஆளும் பாஜக மற்றும் என்டிஏ கூட்டணி கட்சிகளுக்கு எதிராக, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சியைசேர்ந்த பிரதிநிதிகள் கண்டன உரையாற்றினர். இந்நிகழ்வில் மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணிகட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (14.03.2026) அன்று தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் FST (Flying Squad Team), SST (Static Surveillance Team), VST (Video Surveillance Team), VVT (Video Viewing Team) மற்றும் வீடியோ பதிவாளர் (videographer) ஆகியோர்களுக்கான பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.